டக் பேட்ச்லர்

# கடனிலிருந்து விடுதலை



Copyright © 2004, 2022
by Doug Batchelor

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034
**+91 916 916 4480**

www.AmazingFactsIndia.org

# கடனிலிருந்து விடுதலை

டக் பேட்ச்லர்

***கடனிலிருந்து விடுதலை** : ஓர் ஆச்சரியமான உண்மை: தென் மிஸ்ஸிசிப்பி பல்கலைக்கழகத்தின் மிகப் பிரபலமான நன்கொடையாளர் ஒரு மில்லியனரோ, புகழ்பெற்ற அரசியல்வாதியோ அல்லது பெரும்புள்ளியோ அல்ல. அவருடைய பெயர் ஓசியோலா மெக்கார்டி. 1995ல், இவர் ஒரு அறக்கட்டளையை நிறுவினார், இதன்மூலம் அவருடைய வாழ்க்கை முழுவதும் செய்த சேமிப்புப் பணமான 150,000 டாலர்களையும் அவருடைய இறப்பின்போது பல்கலைகழக மாணவர்களுடைய பொருளாதார உதவிக்காக நன்கொடை அளிக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர் ஒருபோதும் பல்கலைகழகத்தில் படித்ததில்லை. ஆனால் மிகவும் அசாதாரணமான ஒரு உண்மை என்ன தெரியுமா? ஓசியோலாவின் அனுதின வேலை உடைகளைத் துவைத்து இஸ்திரி செய்வதாகும். அந்த பணம் முழுவதுமே எளிமையான வாழ்க்கை மற்றும் கவனமான சேமிப்பின்மூலம் சேர்த்ததாகும்.*

**உள்ளடக்கங்கள்**

**கடன் ஒரு நபரை எவ்வாறு பாதிக்கிறது? . . . . . . . . . . . . . . 4**
**கடன் அடிமைத்தனத்தைக் கொண்டுவருகிறது . . . . . . . 5**
**கடன் கவலையைக் கொண்டுவரும் . . . . . . . . . . . . . . . . . 8**
**நமக்கு ஏன் கடன் இருக்கிறது? . . . . . . . . . . . . . . . . . . . . 10**
**கடன் 101: எவ்வாறு தவிர்ப்பது? . . . . . . . . . . . . . . . . . . . . 15**
**கடன் பாவமா? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 21**
**உங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றுங்கள் . . . . . . . . 26**
**கடன் 102: எப்படி இதிலிருந்து வெளியே வருவது? . . . . 30**
**தேவையான கடன் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 35**
**மிக முக்கியமானக் கடன் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 36**
**மன்னிப்பு என்னும் கடன் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 38**

# பொருளடக்கம்:

கடன். இது ஒரு தவறான வார்த்தையைப்போல் தோன்றுகிறது இல்லையா?

இந்தக் கடன் நமது வீடுகள், பள்ளிகள், ஓய்வு நேரம், பயணம் செய்வதற்கான வழிகள், நாம் வைத்திருக்கக்கூடிய மற்றும் நாம் செய்யக்கூடிய அனைத்திலும் ஒரு அங்கமாகவே மாறிவிட்டதைப்போல் தோன்றுகிறது. இன்னும் சொல்லப்போனால், இது நம்முடைய அரசாங்கத்தின் கொள்கையாகவும் இருக்கிறது. இப்பொழுதும் அமெரிக்கா 22 ட்ரில்லியன் ரூபாய் தேசியக் கடனை எட்டியுள்ளது; ஒவ்வொரு நாளும் ஒரு புதிய ஏற்றத் தொகையானது பதிவுசெய்யப்படுகிறது.

மேலும், அமெரிக்கப் பிரஜைகளின் நான்கு சக்கர வாகனக் கடன் மட்டுமே 1.2 ட்ரில்லியனும் மற்றும் மாணவர்களுக்கானக் கடன் 1.5 ட்ரில்லியனையும் எட்டியுள்ளது. ஆனால் அடைமானத் தொகை மட்டும், குறிப்பிடத்தக்க விதத்தில், மிக மோசமான நிலையில் 9 ட்ரில்லியனுக்கும் அதிகமாக உள்ளது.

நாம் மேற்கொள்ளவேண்டியவை இப்படிப்பட்டப் பதிவுகள் அல்ல. பின் எதற்காக நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் இத்தனை அதிகமானக் கடன்கள்? ஏன் கடன் ஒரு கொடிய வீரியமுள்ள கட்டியைப்போல வளர்ந்துகொண்டே போகிறது? உண்மையாகவே, கடன் ஏதோ வாகனத்தை விட்டு இறங்காமலேயே உணவு பரிமாறப்படும் இடத்தைப்போல அல்லது இணையதளம் போல நம்முடைய அன்றாட வாழ்க்கையின் அங்கம் என்றுகூட நீங்கள் நினைப்பதற்குத் தூண்டப்படலாம்.

ஆனால் அது அவ்வாறு இல்லை! கடன் என்னும் பாரத்தின்கீழ் நாம் வாழும்படியாக தேவன் நம்மை உருவாக்கவில்லை. பொருளாதாரத்திற்கும்

கடனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் 500க்கும் மேற்பட்ட வேத வசனங்கள் பொருளாதாரம் மற்றும் சொத்துக்களைப் குறித்து குறிப்பிடுகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? மேலும், இயேசு கூறிய 38 உவமைகளில் 16 உவமைகள் பொருளாதார நிர்வாகம் மற்றும் சொத்துக்கள் குறித்து உள்ளதென்று உங்களுக்குத் தெரியுமா?

எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கையில் கடனை எவ்வாறு பார்க்கவேண்டும்? எவ்வாறு அணுகவேண்டும்? இதற்கு வேதம் எவ்வாறு பதிலளிக்கிறது என்று பார்ப்போம்.

## கடன் ஒரு நபரை எவ்வாறு பாதிக்கிறது?

மற்ற அனைத்துப் பிரச்சனைகளையும் மக்கள் ஒதுக்குவதுபோலக் கடனைக் குறித்தும் அசதியாக இருக்கும்போது, கற்பனை செய்து பார்க்கமுடியாத அளவிற்கு, ஒரு நபரை முற்றிலும் சீரழிக்கும்வரை அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துகொண்டே போகிறது.

அறிக்கைகளும், கட்டுரைகளும், வலைப்பதிவுகளும் பல வருடங்களாக இதைத்தான் உரக்கக் கூறிக்கொண்டே இருக்கின்றன: கடன் என்னும் அணுகுண்டு வெடிக்குமா அல்லது உள்ளுக்குள்ளாகவே சிதைந்துபோகுமா என்பது கேள்வியல்ல, ஆனால் அது எப்போது நிகழும் என்பதுதான் முக்கியம். அமெரிக்கா தொடர்ந்து அதிகமாகக் கடனை வாங்கிக்கொண்டே போகமுடியாது, ஏனெனில் அதற்கான விளைவுகளை எதிர்காலத்தில் சந்தித்தே ஆகவேண்டும். இதை அமெரிக்கா என்று கூறுவதைக்

காட்டிலும், ஒவ்வொரு தனிநபரும் சந்திக்கவேண்டும் என்றும் கூறலாம். கார் ஒன்று சுவரை நோக்கி வேகமாகப் பாய்ந்துகொண்டிருப்பதுபோலத் தவிர்க்கமுடியாத ஒரு விபத்தை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கிறோம்.

கேட்பதற்கே பயங்கரமாக இருக்கிறதல்லவா? இப்பொழுதும் நாம் என்ன செய்வது? கடன் என்னும் பிரச்சனையைக் குறித்து என்ன செய்வது என்ற கேள்விக்கு பதில் கொடுப்பதற்குமுன், இந்த நிலைமைக்கு நாம் எப்படி வந்தோம் என்பதை முதலில் கண்டறியவேண்டும்.

அடிப்படைகளிலிருந்து துவங்குவோம்: கடன் என்றால் என்ன? அது உங்களுக்கு என்ன செய்கிறது? எப்படிப்பட்ட பாதிப்பைக் கொண்டுவருகிறது?

## கடன் அடிமைத்தனத்தைக் கொண்டுவருகிறது

கடனாளியாக மாறுவதில் இரண்டு காரியங்கள் நடக்கின்றன:

1. விரும்பிய பொருள் அல்லது சேவை நமக்குக் கிடைக்கிறது.
2. நமக்கு வேண்டியதைக் கொடுத்த ஒரு நபருக்கோ, ஒரு தரப்பினருக்கோ, அல்லது ஒரு நிறுவனத்திற்கோ நாம் கடன்பட்டவர்களாகிறோம்.

இந்தக் கடமையானது ஒரு ஒப்பந்தத்திற்கு ஒத்ததாக இருக்கிறது. அதாவது கடனாளியாகிய நீங்கள் உங்களை நீங்களாகவே மனமுவந்து கடன்கொடுத்தவருக்குக் கீழே ஒப்படைக்கிறீர்கள்.

அப்படியானால், கடன் என்பது ஒரு வகையில் அடிமை சாசனமாகும். (ஒரு பெரிய இரும்புப் பந்தும் அதனுடன் சேர்த்து சங்கிலியால் கட்டப்பட்ட (கடன்பட்ட) நபரும் இருக்கக்கூடிய புகைப்படத்தை ஒருவேளை நீங்கள் பார்த்திருக்கலாம்) ஆனால் உண்மையாகவே, நீதிமொழிகள் 22:7 இவ்வாறாகத்தான் கூறுகிறது, "ஐசுவரியவான் தரித்திரனை ஆளுகிறான்; கடன்வாங்கினவன் கடன்கொடுத்தவனுக்கு அடிமை." கடன் வாங்கினவர் தாமாகவே கடன்கொடுத்தவரிடம் திறம்படத் தம்மை இணைத்துக்கொள்கிறார்.

இங்கே ஓர் ஆர்வமூட்டும் உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது: 2 இராஜா. 4ம் அதிகாரத்தில் கடனில் இருக்கும் ஒரு விதவை எலியா தீர்க்கதரிசியை உதவிக்காக நாடுகிறாள். அக்காலத்தில், கடன் வாங்கியவன் கடனைத் திரும்ப செலுத்தமுடியாமற்போனால் கடன் கொடுத்தவர் சொத்துக்களை மட்டுமல்ல மனிதர்களையும் கொண்டுபோவது வழக்கமாக இருந்தது. இந்த விதவை அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இருந்தாள். அவளுடைய புருஷன் கடன்வாங்கியிருந்தான், ஆனால் அதைக் கொடுப்பதற்குமுன் மரித்துவிட்டான். வழக்கத்தின்படி அந்தக் கடன் அவள்மீது விழுந்தது, அவளால் அதைத் திருப்பிக் கொடுக்கமுடியவில்லை. வசனம் 1ல், "கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ள வந்தான்" என்று விரக்தியில் அவள் புலம்பினாள். அவளுடைய முழுக்குடும்பமும் "கடன்கொடுத்தவனுக்கு அடிமைகளாவதற்கு" இருந்தனர்.

கடன் உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் காரணியாக இருக்கும்போது, மற்ற இடங்களையும் அது விட்டுவைப்பதில்லை. சூதாட்டத்தில் 500,000

டாலர்கள் கடன்பட்ட ஒரு பெண்மணியை நான் அறிவேன். அவள் பீதியடைந்தவளாகவும், பயத்துடனும், நம்பிக்கையிழந்தவளாகவும் காணப்பட்டாள். தொடர்ந்து சூதாடுவதற்காக அவள் தனது கணவனிடமிருந்துகூட பணத்தைத் திருடியிருக்கிறாள். அவள் இந்த மிகப்பெரியக் கடனை வைத்திருப்பதுடன் அது அவளுடைய உறவுகளையும், திருமணத்தையும் மற்றும் அவளது முன்னுரிமைகளையும்கூட பாதித்தது. அதுவே அவளுடைய வாழ்க்கை முழுவதும் அவளை உந்தித்தள்ளும் விசையாகவும் மாறியது.

பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் அண்மையில் ஒரு பெண் சமூகவியலில் இளங்கலைப் பட்டம் முடித்தாள். அதற்கான மாணவர் உதவிக் கடனாக 100,000 டாலர்கள் அவளுடைய அக்கவுண்ட்டில் குவிந்தது. அடுத்ததாக அவள் சட்டக்கல்லூரியில் விண்ணப்பிக்க வேண்டுமென்பது அவளுடைய திட்டமாக இருந்தது. ஆனால் அந்த உதவிக் கடன் நிமித்தம் அவளால் அதில் சேரமுடியவில்லை. அதற்கு பதிலாக அவள் தன்னுடைய தாயுடன் குடிபெயர்ந்து, கிராஃபிக் டிசைனர் பணியில் சேர்ந்தாள். சந்தேகமின்றி, அவள் தனது படிப்பை முதலில் முடித்து பின்னர் அதன்மூலம் கடன்களை அடைக்கவேண்டுமேன்பதே அவளுடைய திட்டமாக இருந்தது. ஆனால் அந்தக் கடனே அவள் உருவாக்கிய எதிர்காலப் பாதையை மாற்றிப் போட்டது! இதனால் நீங்கள் கல்வியைப் பெறக்கூடாது என்று நான் சொல்லவில்லை, ஆனால் உங்களுடைய கடன் உங்கள் வாழ்க்கையையே கட்டுப்படுத்தக்கூடாது என்று கூற விரும்புகிறேன்.

நாம் எதற்காவது அல்லது யாருக்காவது அடிமைகளாக இருக்கும்போது, நம்மால் தேவனை சேவிக்கமுடியாது என்பதே உண்மையாகும். மத்தேயு

6:24 இவ்வாறு கூறுகிறது: “இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனை சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைப்பண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.” உலகப்பொருள் என்பது உலக சம்பத்தைக் குறிக்கும் வார்த்தையாகும். பணம் மற்றும் பொருளுக்கான உங்களுடைய தேவையானது தேவனுடைய சித்தத்திற்கு உங்களை ஒப்புவிப்பதற்கு மேலாக ஆதிக்கம் செலுத்துமானால், அது ஒரு மிகப்பெரிய பிரச்சனை என்று வேதம் உங்களுக்கு சமிக்ஞை செய்கிறது. அந்தத் தேவை உங்களைக் கடனுக்குள் மேலும் மேலும் அமிழ்த்துமானால், சூதாட்டப் பழக்கமுள்ள அந்தப் பெண்மணியைப் போல, இது உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தமல்ல என்பதை மிகத்தெளிவாக உங்களால் புரிந்துகொள்ளமுடியும்.

## கடன் கவலையைக் கொண்டுவரும்

கவலை கடனுடைய நெருங்கிய நண்பனாகும். 44 சதவிகித அமெரிக்கர்கள் பணம்தான் தங்கள் மன அழுத்தத்திற்கானப் பெரிய காரணம் என்று கூறுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதில் கடனும் உள்ளடங்கும். நீங்கள் விரும்பும் பொருளையோ அல்லது சேவையையோ பெறுவதினால் ஒரு தற்காலிகமான உற்சாகம் உங்களுக்குக் கிடைக்கலாம், ஆனால் அதனுடன் சேர்ந்து பசையைப்போல் ஒட்டிகொண்டு கவலையும் கூடவே வரும். மேலும் அந்த உற்சாகம் மறைந்துபோனபிறகும் கவலை நீடித்துக்கொண்டே இருக்கும்.

ஹெலன் ஸ்டீனர் ரைஸ் என்ற கவிஞர் இவ்வாறு எழுதுகிறார்:

கவலையா? எதற்கு கவலை? கவலை உனக்கு
என்ன செய்யும்?எந்தப் பிரச்சனையும் உன்னை
மேற்கொள்ளவிடாமல் அது தடுப்பதில்லை.
செரிமாணமின்மையையும் தூக்கமில்லா
இரவுகளையுமே அது கொடுக்கும்,
கடந்தோடும் பிரகாசமான நல்ல நாட்களை
மந்தாரமாக்கி,
சுருங்கும் புருவத்தையும் கடுமையாகப் பேசும்
தொனியையும் கொடுத்து,
பிறருடன் சேர்ந்து வாழவும் சரி தனிமையில்
வாழவும் சரி
நீ தகுதியற்றவன் என்று உன்னை
நினைக்கவைத்துவிடும்.

கடனாளியாக இருப்பதைக் குறித்தும், கடனைத் திரும்பக் கொடுக்கமுடியாத நிலையைக் குறித்தும் கவலைப்படுவதால், இறுதியில் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படுமே என்ன செய்வது? கவலை அதனுடன் சேர்த்து மனஅழுத்தம், பயம், மற்றும் மனச்சோர்வையும் கொண்டுவரும். கடன் உங்களுடைய சுபாவத்தையும் பாதிக்கும். பிறரிடம் நீங்கள் பொறுமையற்றவர்களாகிவிடுவீர்கள். கவலையைப் போக்கும் முயற்சியானது இறுதியில் புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் போன்ற ஆரோக்கியமற்றப் பழக்கங்களுக்கு வழிநடத்தும். இது ஆரம்பத்தில் நீங்கள் கடன் வாங்க கையெழுத்திட்டபோது இருந்ததைக்

காட்டிலும் மிகவும் மோசமான சூழ்நிலைக்கு உங்களைத் தள்ளிவிடுவதைப் போலிருக்கிறது.

எல்லாவற்றைக்காட்டிலும், கவலைப்படுதல் உங்களைக் கடன் கொடுக்கும் பிரச்சனையிலிருந்து வெளியேறும் தீர்வைத் தராது. மாறாக, உங்கள் முழு வாழ்க்கையையுமே கடனுடைய வல்லமைக்குப் பணியவைத்துவிடும்.

எனவே, நீங்கள் விரும்பும் ஒரு காரியத்தைக் கடன் உங்களுக்குக் கொடுக்கும்போது, அதனுடன் சேர்த்துக் கவலையும் அடிமைத்தனமும் வருகிறது என்பதை மறக்கவேண்டாம். இன்னும் சொல்லப்போனால், உங்கள் வாழ்க்கையின் பாதை முழுவதையும் மோசமான நிலைக்குத் திருப்பிவிடும் ஆற்றல் அதற்கு உண்டு. காரியம் இப்படியாயிருக்க, கடன் வாங்குவது சிறிதளவுகூட ஈர்ப்புள்ளதாகத் தோன்றவுமில்லை, மேலும் இது நிச்சயமாக மக்கள் தங்களை தாங்களே மனமுவந்து ஒப்படைக்ககூடிய ஒன்றாகவும் தெரியவில்லை.

பின் எதற்காக நம்மிடம் இவ்வளவு கடன்?!

## நமக்கு ஏன் கடன் இருக்கிறது?

பொருட்களை அதிகமாகப் பயன்படுத்தும் காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் –உடனடியாகப் பொருட்களைப் பயன்படுத்தி மனநிறைவைக் காணும் தன்மை இருப்பதுடன் அது பழக்கமாகவும் மாறி எதிர்ப்பார்க்கவும்படுகிறது. ஆன்லைனில் ஒரு பட்டனை அழுத்தினால் போதும், ஒரு பொருள் அடுத்த நாளே, சில சமயங்களில் அதே நாளே நம் வீட்டு வாசலுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. ஆன்லைன் தேடுதல் படிவத்தில் கோர்வையான

வார்த்தைகளை டைப் செய்தவுடன் அங்கிருந்து நாம் வாங்கவேண்டிய பொருட்களுக்கான விளம்பரங்கள் தோன்றுகின்றன. நாம் குறிப்பிட்டு ஒரு பொருளை வாங்குவதற்காகத் தேடவேண்டியதில்லை. அவைகளைப் பெறுவது மிகவும் சுலபமாகவும் அப்பொருட்கள் அநேகமாகவும் உள்ளன.

எனினும், "பொருட்கள்" நம்மை சந்தோஷப்படுத்துவதில்லை என்று ஆராய்ச்சி கூறுகிறது. உண்மையை சொல்லவேண்டுமென்றால் மக்கள் தங்கள் பணத்தை உலகப் பொருட்களில் செலவிடுவதைக் காட்டிலும் அனுபவங்களைப் பெருவதில் செலவிடவே விரும்புகின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஏன்? ஏனென்றால் பொருட்களில் செலவிடுவதால் சந்தோஷம் கிடைக்கிறது என்னும் அனுமானம் ஒரு கட்டுக்கதையாகும். உலகப் பொருட்களினால் வரக்கக்கூடிய சந்தோஷம் துரிதமாக மறைந்துபோகும். அனுபவங்களோ மறக்கமுடியாத நினைவுகளைக் கொடுக்கும், மேலும் அது உங்களுடைய உலகத்தையும் திறந்துவைக்கும்.

அமெரிக்காவில், சிலர் ஸ்மார்ட்ஃபோன்களையும் அழகாக வடிவமைக்கப்பட்ட விலையுயர்ந்த கைப்பைகளையும் வாங்குவதற்காக அரசாங்க உதவியைப் பெறுகிறார்கள். அவர்களுக்கு வேலை எதுவும் இல்லை ஆனாலும் ஆடம்பரமானப் பொருட்களை வைத்துள்ளனர். இது ஒருவகையில் பின்தங்கிய ஒரு சூழ்நிலையைக் காட்டுகிறதல்லவா? சில நேரங்களில், வாழ்க்கைக்குத் தேவையான காரியங்கள் என்ன, தேவையற்ற காரியங்கள் என்ன என்பதை நிர்ணயிப்பதில் மக்களுக்குக் குழப்பம் காணப்படுகிறது. நமக்கு வேண்டியபோதெல்லாம் பொருட்களை வாங்கக்கூடிய சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

ஆனால் எல்லாவற்றையும் வேதவசனம் நன்றாக அறிந்திருக்கிறது: "ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்துக்கும் ஏதுவாகும்" (நீதி. 21:5). நாம் சுயக்கட்டுப்பாட்டில் குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். அதுவே உள்ளும் புறமும் நம்மை அழித்துக்கொண்டிருக்கிறது.

உண்மையாகவே, சில சூழ்நிலைகளில் கடனை அடைப்பதற்கான உதவி கிடைப்பதில்லை. சூழ்நிலையினிமித்தம் யோபு அவன் சக்திக்கு மீறின கடனை சேகரித்துக்கொண்டான். எலிசாவிடம் உதவி கேட்டுச் சென்ற விதவையோ தன் கணவனுடைய கடனைச் சுமந்துகொண்டிருந்தாள். ஆனால் நாமோ வேண்டுமென்றே, தெரிந்தே நமது கடன்களைத் தேர்வு செய்கிறோம். பொருட்களை வாங்குவதற்காக ஏதோ கிரெடிட் கார்டு கம்பெனிகள் நம்மைக் கட்டாயப்படுத்துவதில்லை. "உண்மையாகவே இந்தப் பொருள் எனக்குத் தேவைதானா" என்ற கேள்வியை நாம் எப்போதாவதுதான் கேட்கிறோம்! கடனை அடைக்காததால் ஏற்படும் அனைத்துப் பிரச்சனைகளையும் பிற்பாடு, அதாவது எதிர்காலத்தில், பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்து நம்மை நாமே வஞ்சித்துக்கொள்கிறோம். பிரச்சனை என்னவென்றால் 'பிற்பாடு' என்பது தவிர்க்கமுடியாதவாறு 'இப்பொழுது' என்று மாறிவிடுகிறது. 'அது இப்போது விற்பனையில் உள்ளது' மற்றும் 'குறைவானப் பதிப்புக்களே உள்ளன' என்று ஒரு பொருளை வாங்குவதைக் குறித்துப் பகுத்தறிவதிலும், அதை நியாப்படுத்துவதிலும் நாம் கைத்தேர்ந்தவர்கள். ஆனால் இந்தப் பணத்தை சிறந்த வகையில் எவ்வாறு செலவு செய்யமுடியும் என்று நாம் கேட்பதேயில்லை.

மேலும் கலாச்சார மற்றும் சமூக ரீதியானப் பகுத்தறிதலில் விழுந்துபோவதும் சுலபமாகும். கடன் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாரிவிட்டது இயற்க்கை என்பதுபோல் தோன்றுகிறது. மேலும், உங்களைச் சுற்றியுள்ளவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் கடனில் இருப்பதும், கடன் ஒரு அத்தியாவசியத் தீமை என்னும் கருத்தை நீங்கள் ஏற்காததுபோலவும் இருக்கிறீர்கள். ஆனால் அப்படி இல்லை. உங்கள் வாழ்க்கையின் பெரும்பான்மையான காலத்திற்கு அல்லது வாழ்க்கை முழுவதும் கடன் வைத்திருப்பதையே நீங்கள் தேர்வு செய்கிறீர்கள்.

தேவன் வாக்குரைத்திருக்கிற அந்தச் சிறந்த வாழ்க்கைக்காக நாம் பொறுமையுடன் காத்திருக்குமாறு வேதம் ஆலோசனைக் கூறுகிறது: “நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே” (யாக். 5:8). மேலும், “ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” (மத். 16:24) என்று இயேசு நம்மிடம் கூறுகிறார். கிறிஸ்துவின் பின்னடியார்களைக் குறித்தோ இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது, “இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்... அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட

வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே" (எபி. 11:13, 16).

இந்த வாழ்க்கையை விலையுயர்ந்த பொருட்களை சேர்ப்பதில் நாம் கழிக்கக்கூடாது; நமது இருதயத்தை, நமது மனதை, நமது குணங்களை தேவனுடனான நம்முடைய எதிர்கால வாழ்க்கை வாழ்வதற்காக ஆயத்தப்படுத்தும்படியாக வாழவேண்டும். எதிர்காலத்தில் செழிப்புடன் வாழ, இன்று நாம் சுயமறுப்பைப் பழக்கப்படுத்தவேண்டும்.

காத்திருத்தல் என்றால் எதையும் செய்யாமல் இருப்பது என்று வேதம் சொல்லவில்லை. அதே சமயம், நம்முடைய செயல்களில், ஆயத்தங்களில், சாட்சிப்பகர்தலில் நாம் பொறுமையுடன் இருக்கவேண்டும் என்று தேவன் ஆலோசனையளிக்கிறார். பொருட்களைப் பயன்படுத்தும் இச்சமுதாயம், கொடுப்பதற்கு பதிலாகப் பெற்றுக்கொண்டே இருக்கும் செயலற்ற தன்மையில்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் செயலற்ற நிலையில் இருப்பது அறிவீனம் என்று வேதம் கூறுகிறது: "சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்" (நீதி. 6:6). நம்மெல்லோருக்கும் தெரிந்த ஒரு வசனம் இவ்வாறு கூறுகிறது: "சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்" (நீதி. 13:4).

நாம் பேசின ஒவ்வொரு தேவையற்ற வார்த்தைக்காகவும் நாம் தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிப்போம் (மத். 12:36). நாம் தேவையில்லாமல் செலவழித்தப் பணத்துக்காகவும் கணக்கு ஒப்புவிபோமா? பிரசங்கி 12:14 இவ்வாறு கூறுகிறது: "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு

காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்."

## கடன் 101: எவ்வாறு தவிர்ப்பது?

முதலாவது, கடனுக்குள் சிக்காமல் எவ்வாறு அதைத் தவிர்ப்பது என்ற ஒரு சில அடிப்படையான நடைமுறைக் கோட்பாடுகளைப் பார்ப்போம். இந்தச் சிறியப் பட்டியலில் இருக்கும் படிகளை எவரும் எந்த நேரத்திலும் கடைப்பிடிக்கலாம். இவைகளைப் பயிற்சி செய்வதற்குமுன் கடன் அதிகமாகச் சேராதபடிக்குப் பார்த்துக்கொள்ளவும். இப்போதே துவங்குங்கள். தேவனுடன் உங்கள் எதிர்காலத்திற்காக அற்புதமானப் பழக்கங்களை இப்போதே உருவாக்குங்கள். (இந்தக் குறிப்புகள் பல்வேறு பொருளாதார நிபுணர்களால் தொகுக்கப்பட்டதாகும்.)

- **ஒரு சேமிப்பு கணக்கை வங்கியில் துவங்கவும்.** சேமிக்க உங்களிடம் பணமில்லையென்று நீங்கள் நினைத்தாலும், இந்த யோசனையை மறுபரிசீலனை செய்யவும். இன்றைய காலக்கட்டங்களில், சேமிப்புக் கணக்கைத் துவங்குவதற்கு வெறும் 10 டாலர்களே தேவைப்படுகிறது. உங்களுடைய அன்றாடக் கட்டணங்கள் மற்றும் செலவுகளை நிர்வகிக்கக்கூடிய வங்கியில்லாமல் வேறொரு வங்கியில் இதைத் துவங்கவும். இதன்மூலம், அதை அவ்வப்போது நோட்டமிடுவதற்கு நீங்கள் தூண்டப்படாமலிருக்கலாம். அது ஒரு சில டாலர்களாக இருந்தாலும் சரி, தொடர்ச்சியாக அதில் பணத்தைப் போடுவதற்கு

முற்படுங்கள், உங்கள் மனப்பான்மை எவ்வாறு மாறத் துவங்குகிறது என்பதை கவனியுங்கள். இபோழுதும் நீங்கள் செலவு செய்து அழிக்காமல் சேமித்துக் கட்டுகிறீர்கள்.

நீங்கள் பொருட்கள் வாங்குவதில் ஈடுபாடு உள்ளவரென்றால், எதிகாலத்திற்காக சேமித்து வைப்பதில் ஒரு நீடித்த மகிழ்ச்சி இருப்பதை நீங்கள் உணருவீர்கள். “உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்” (1 கொரி. 16:2).

- **வரவுச் செலவுப் பட்டியலை உருவாக்கவும்.** நம்மில் அநேகர் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதை அறியாததினாலேயே பணமற்ற நிலையில் இருக்கிறோம். ஆனால் நிச்சயமாக நம்மால் ஒரு மனக்கணக்கைக் கொண்டுவரமுடியும்; எனினும் நம்முடைய செலவுகளைக் குறித்து குறைவாக மதிப்பிடும் போக்கும் நம்மிடம் உள்ளது. தினமும் 15 டாலர்கள் கொடுத்து மதிய உணவு வாங்குவதையோ அல்லது அடிக்கடி பெரிய மால்களுக்குச் சென்று நமக்குப் பிடித்தமான சிறு சிறு பொருட்களை வாங்குவதையோ நாம் மறந்துபோகிறோம். இப்படிப்பட்டச் செலவுகள் நாம் நினைப்பதைக் காட்டிலும் துரிதமாகப் பெருகிவிடும். உங்கள் ரசீதுகளையும் வங்கி அறிக்கைப் பதிவுகளையும் பத்திரப்படுத்தி உங்கள் பணம் எங்கே போகிறது என்பதை ஆராயுங்கள்.

மிக முக்கியமாக, உங்களுக்கு நீங்களே நேர்மையாக இருங்கள். சாத்தியமான, நடைமுறைக்கு ஏற்புடைய, நேர்மையான வரவு-செலவு திட்டம் ஒன்றை உருவாக்கி அதற்குள் வாழப் பழகுங்கள். சில சமயங்களில், செலவுகள் நம் முகத்திற்கு நேராக நின்று நம்மை ஈர்க்கும்போது, நம்மைக் குறித்த சில கருத்துக்களை ஒப்புக்கொள்வதற்கு நமக்குக் கடினமாக இருக்கலாம். ஆனால் இப்பொழுது எடுக்கக்கூடிய இச்சிறு முயற்சியானது நீண்ட காலத்திற்கு உதவி செய்து எதிர்காலத்தில் பொருளாதாரப் பாதுகாப்பை உங்களுக்குக் கொடுக்கும். "உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால்... பார்க்கிறவர்களெல்லோரும் இந்த மனுஷன் கட்டத்தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னை பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப்பாராமலிருப்பானோ?" (லூக்கா 14:28).

- **உங்கள் மளிகைப் பொருட்களைக் குறித்து மீண்டும் சிந்தியுங்கள்.** வாழ்க்கைக்கு உணவு முக்கியமானதாகும், எனவே அதற்காக நாம் அடிக்கடி கடைக்குச் செல்வதென்பது அனுதினமும் நடக்கக்கூடிய வேலைகளில் ஒன்றாகும். மளிகைக் கணக்கை சரிபார்ப்பது சுலபமானதாகும், ஆனால் அதுவே உங்கள் கைமீறிப் போகவும் வாய்ப்புகள் அதிகம். நம்மில் சிலருக்கு மார்க்கெட்டிற்குள் எந்த ஒரு நோக்கமுமின்றி அலைந்து திரிவதும்,

மனக்கிளர்ச்சியுடன் நம் வாய்க்கு ருசியான விலையுயர்ந்த திண்பண்டங்களை வாங்குவதும் பிடித்தமான ஒரு விஷயமாகும். சில பெற்றோர்க்கள் தங்கள் பிள்ளைகளை அவர்களுக்குப் பிடித்தமான எந்த பொருட்களையும், அவை அதிக விலையாக இருந்தாலும் சரி அல்லது சாதாரண, ஆரோக்கியமற்றவைகளாக இருந்தாலும் சரி, கடை அலமாரியிலிருந்து எடுப்பதற்கு அனுமதிக்கின்றனர்.

கடைக்குச் செல்வதற்கு முன், உண்மையாகவே உங்களுக்கு என்ன தேவை என்ற ஒரு பட்டியலைத் தயார் செய்து, கடைக்குச் செல்லும்போது அந்தப் பட்டியலில் உள்ளதை மட்டும் வாங்குவது சிறந்ததாகும். சில உணவுப் பொருட்களை, விசேஷமாக நீங்கள் பொதுவாக உண்ணக்கூடிய உலர்ந்தவைகளை, மொத்தமாக வாங்குவது பணத்தை சேமிக்க உதவும். "... போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்..." (நீதி. 23:21).

- **காணிக்கை மற்றும் தசமபாகத்தில் உண்மையாயிருங்கள்**. தேவையானப் பொருட்களையெல்லாம் வாங்கியபிறகு, சிலர் காணிக்கையை மற்றுமொரு செலவாகக் கருதுவதுண்டு. "ஒருவேளை எனக்கு சம்பள உயர்வு கிடைக்கும்வரைக்கும் நான் தசமபாகம் கொடுக்கவில்லையென்றாலும் தேவன் என்னைப் புரிந்துகொள்வார்" என்று அவர்கள் நினைக்கலாம், ஏனென்றால் மற்ற செலவுகள் அனைத்தும் அவர்கள் தரமான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையென்று நினைக்கிறார்கள். ஆனால்

உண்மையில், நமக்கு சொந்தமென உரிமைப் பாராட்டக்கூடிய அனைத்தும், நம்மிடமுள்ள அனைத்தும் தேவனுடையதாகும். “ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்” (1 நாளா. 29:12). ஆனால், கிருபையுள்ள நம்முடைய பிதாவோ, கீழ்ப்படிதலின் அடையாளமாக நம்மிடமிருந்து பத்தில் ஒரு பங்கை மட்டுமே கேட்கிறார்.

முதலில், பலனை எதிர்பார்த்து அல்ல, பத்தில் ஒரு பங்கைக் கொடுப்பதில் உண்மையாக இருங்கள், பிற்பாடு தேவன் பல வழிகளில் கிரியை செய்வதை நீங்கள் பார்க்கத் துவங்குவீர்கள். தேவன் உங்களுடைய கீழ்ப்படிதலை அவருடைய மகிமைக்காகவும் உங்களுடைய நன்மைக்காகவும் வாஞ்சிக்கிறார். “உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்” (நீதி. 28:20).

- **இல்லத்தை சுத்திகரியுங்கள்**. பொருட்களை அதிகமாகப் பயன்படுத்தும் சமுதாயத்தில் வாழ்வதென்றால், அநேகமானவைகளை சேர்க்கும் சாத்தியகூறு மிகவும் அதிகமாக இருக்கும். உண்மையை சொல்லவேண்டுமானால், இந்தப் பொருட்கள் அனைத்தும் நமக்குத் தேவையில்லாததாகும். சில பொருட்கள் பல வருடங்களுக்கு பரண்மீதும், வாகனத்தை நிறுத்துமிடத்திலும் திறக்கப்படாத நிலையில் இருக்கலாம்.

உங்கள் இல்லத்தை முழுவதுமாக ஒருமுறை நன்றாக ஆராய்ந்து, சுத்தம்செய்து இந்தப் பொருட்கள்

இல்லாமலும் வாழலாம் என்று எவைகளை நினைக்கிறீர்களோ அவைகள் அனைத்தையும் அகற்றிபோடவும். வாழ்கையை எப்படியும் மாற்றக்கூடியக் காலத்தில் வாழ்துகொண்டிருக்கும் நம்மால் எதையும் எளிதில் வாங்கமுடிகிறது என்றால், எதையும் எளிதில் விற்கவும் முடியும். விற்கவேண்டிய அப்பொருளை ஒரு புகைப்படம் பிடித்து, ஈ-பே அல்லது ஃபேஸ்புக்கில் அல்லது மற்ற மின் வணிக வலைதளங்களில் விளம்பரம் செய்யவும். ஒருவேளை அது நீங்கள் உபயோகிக்காத வணிக உறுப்பினர் படிவங்களாக இருக்கலாம் அல்லது படிக்காத தூசிப்படிந்தப் பத்திரிக்கைகளாக இருக்கலாம். இவை யாவும் உங்களுடைய புதிய வங்கிக்கணக்கில் நல்லதொரு சேமிப்பாக அமையும். “பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்” (கொலோ. 3:2).

- **வருமானம் ஈட்டுவதற்கானப் புதிய வழிகளைத் தேடுங்கள்.** ஓய்வுநாளில் ஓய்வெடுக்கவேண்டுமென்று நான்காம் பிரமாணம் கூறுகிறது. இது வாரத்தின் ஒரே ஒரு நாளுக்கு மட்டுமே. மற்ற ஆறு நாட்களும் என்ன செய்யவேண்டுமென்று அது போதிக்கிறது? “ஆறு நாளும் வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக” (யாத். 20:9). இரண்டுநாள் வார இறுதியானது 1900களில் துவங்கிய நவீன காலத்துக் கருத்தாகும். நாம் “ஞாயிற்றுக்கிழமையிலும்” வேலை செய்யலாம்.

உங்கள் நேரத்தை ஞானமாகவும் விடாமுயர்ச்சியுடனும் பயன்படுத்தி நீங்கள் முயற்சி செய்து, உங்களால் என்ன சாதிக்கமுடியும் என்பதைப் பாருங்கள். எனினும், பெரிய அளவில் பணத்தை

வாக்களிக்கும் பல-நிலை விற்பனை மோசடிகள் போன்றத் துரிதமாகப் பணக்காரராகும் திட்டங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் அவை உங்களை ஆழமாகக் கடனுக்குள் அமிழ்த்திவிடும். "வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம்; கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான்" (நீதி. 13:11). இந்த டிஜிட்டல் காலத்தில், அநேகர் உடல் உழைப்பைப் பயன்படுத்தமுடியவிட்டாலும், தங்கள் வீட்டிலிருந்தே கணினியின் முன் உட்கார்ந்து வருவாயை ஈட்டமுடியும். "சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டு; உதடுகளின் பேச்சோ வறுமையை மாத்திரம் தரும்" (நீதி. 14:23).

## கடன் பாவமா?

"கடனைத் தொடர்ந்து சேர்ப்பது பாவமா?" என்பது கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் கேட்கப்படும் பிரபலமான கேள்வியாகும். கடன்படுவது பாவமென்று வேதம் கூறவில்லையென்றாலும், இது சரியான கேள்வியாக எனக்குத் தோன்றவில்லை. மாறாக, நான் இவ்வாறு கேட்க விரும்புகிறேன்: "கடன் அதிகரிக்குமளவிற்கு தீர்மானமெடுக்க உங்களை வழிநடத்திய நோக்கங்களும் செயல்களும் பாவமாக இருக்குமோ?"

எத்தனை முறை நீங்கள் கண்ட ஏதோ ஒன்றை மற்றவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதற்காகவும், அதைக் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டுமென்பதற்காகவும் வாங்கி வந்திருக்கிறீர்கள்? இதை "இச்சை" வேதம் என்றழைக்கிறது, மேலும் பத்தாவது பிரமாணம் இச்செயலுக்கு விரோதமாகவும் இருக்கிறது. "பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்;

ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்" (லூக்கா 12:15).

பெரும்பாலானக் கடன்களுக்குப் பின்னால் இருக்கக்கூடிய நோக்கங்களைக் குறித்து ஏற்கனவே இன்று பேசிவிட்டோம்; இவையெல்லாவற்றிற்கும் மூல காரணமாக இருப்பது சுயமாகும் – நாம் சுயத்திற்கு சேவைசெய்கிறோம். தேவன் என்ன எதிர்ப்பார்க்கிறார் என்பதை அறிந்து வேலைசெய்வதை விடுத்து உங்கள் ஆசைகளைத் திருப்திப்படுத்துவதில் நீங்கள் அதிக அக்கறைக் காட்டுகிறீர்களா? நீங்கள் உலகப் பொருளை நேசிக்கும்போது, அதின் விலை என்னவாக இருந்தாலும் சரி அதைப் பெறுவதற்கு உங்களை அர்ப்பணிப்பீர்களானால், அது ஆராதனையாகக் கருதப்படும். நீங்கள் உலகப் பொருளை ஆராதிக்கிறீர்களா? வானத்திற்கும் பூமிக்கும் மேலான தேவனுக்கும் மேலாக அது உங்கள் தேவனாக மாறிவிட்டதா? "என்னையன்றி வேறே தேவர்கள் உனக்கு உண்டாயிருக்கவேண்டாம்" (யாத். 20:3).

இதில் நாம் தெளிவாக இருப்போம்: பொருளாதாரத்தில் பொறுப்பற்றத் தன்மை பாவமாகும். கிறிஸ்தவர்களாக, தேவன் நமக்குக் கொடுத்த நேரம், பணம், மற்றும் ஆசீர்வாதங்களுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டிய பொறுப்பு நமக்குள்ளது. இவை ஒவ்வொன்றையும் எவ்வாறு நாம் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியமாகும், மேலும் அது நம்முடைய எதிர்காலத்தையும் நிர்ணயிக்கிறது. சிலசமயங்களில், நீங்கள் திரும்பி அதை தேவனுக்குக் கொடுப்பீர்கள் என்று தேவன் உங்களுக்கு ஆசீர்வதத்தைக் கொடுப்பதுண்டு.

“கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். அநீதியான உலகப்பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?” (லூக்கா 16:10–12).

உலகத்தின் சம்பத்தில் நீங்கள் பொறுப்பற்றவர்களாயிருந்தால், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை உங்களால் எப்படி நிர்வாகிக்கமுடியும்? இந்த உலக வாழ்க்கையில் நாம் எவ்வாறு பணத்தைக் கையாளுகிறோம் என்ற கருத்தே முக்கியமான கனம்பொருந்திய காரியங்களில் நம்முடைய நிர்வாகத்தைச் சுட்டிக்காட்டும்.

இது பரலோகத்தில் நம்முடைய எதிர்கால நித்திய வாழ்வைக் கேள்விக்குறியாக மாற்றுவதுடன், நாம் எவ்வாறு செலவழிக்கிறோம் என்ற பழக்கம் இவ்வுலகில் பிறரிடத்திலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நமக்காக மட்டும் செலவு செய்யும் அனைத்தையும் விட்டுவிடவேண்டுமென்று நினைப்பதைவிட நம்மிடமுள்ள அனைத்தையும் பிறருக்காகக் கொடுப்பதைக் குறித்து நாம் சிந்திக்கவேண்டும். கடன் வாங்கத் தீர்மானிப்பதென்பது அதைத் எப்படித் திரும்பச் செலுத்துவது என்பதைக் குறித்து கவலைப்படுவதாகும். இது உங்களை கிறிஸ்துவிற்கு சாட்சியற்றவர்களாக மாற்றிவிடுகிறது, ஏனெனில் நீங்கள் பிறருடைய நலனில்

அக்கறைக் காட்டாமல் உங்கள்மீதும் உங்களுடைய தேவைகள் மீதுமமே நோக்கமாயிருக்கிறீர்கள்.

நாம் பிறருக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம். "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" என்று பிலிப்பியர் 2:4 கூறுகிறது. "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" என்று ரோமர் 13:8 கூறுகிறது. மேலும், "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்" என்று எபேசியர் 4:28 கூறுகிறது.

கிறிஸ்தவர்களாக நாம் நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் சேர்த்துவைத்தால், எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் நம்மால் கொடுக்கமுடியும். மேலும் நாம் கொடுக்கும்போது, சுயநலமில்லாமல் கொடுக்கும் அந்தச் செயலானது நமக்கு ஆசீர்வாதமாக மாறும் அந்த அற்புதம் அங்கே நிகழ்கிறது. "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்;நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்" (லூக்கா 6:38).

கொடுப்பதால் உங்களுக்கும் திரும்ப ஏதேனும் கிடைக்குமென்பதற்காகக் கொடுக்கவேண்டுமென்று அர்த்தமல்ல. திரும்பப் பெறுவோம் என்று எதையும் எதிர்பார்க்காமல் கொடுங்கள். அதே அதிகாரத்தில் 35வது வசனத்தில் இயேசு இவ்வாறு கூறுகிறார்: "உங்கள்

சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே." இது ஏதோ உலகபூர்வமான பணமோ பரிசோ அல்ல. தேவனுடைய குடும்பத்தில் ஒருவராக எண்ணப்படும் சிலாக்கியமாகும் – உங்களுக்கும் அதே இரத்தம் இருப்பதால் அல்ல ஆனால் உங்களுடைய குணம் அவருடையதைப் பிரதிபலிப்பதே காரணமாகும்! உங்களுக்குத் திரும்பக் கொடுக்கப்பட்ட பரிசு இதுவே: புது இருதயம். "உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" (நீதி. 11:25) – அதாவது பரிசுத்த ஆவியினால் தண்ணீர் பாய்ச்சப்பட்டு, உங்களுக்குள் கிறிஸ்துவின் குணத்தை விதைப்பதாகும்.

உலக சம்பத்து மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதமாகிய இரண்டிலும் உங்களைக் காட்டிலும் கீழான நிலையிலுள்ளவர்களுக்குக் கொடுங்கள். கிறிஸ்துவை அறியாதவர்களுக்குக் கொடுங்கள், ஏனெனில் நீங்களும் ஒரு காலத்தில் அவர்களைப்போலவே காணாமற்போயிருந்தீர்கள். நாம் கிறிஸ்துவின் இருதயத்தைப் பெற்றிருந்தோமானால், காணாமற்போன எத்தனை ஆத்துமாக்களை சுவிசேஷத்தைக் கொண்டு சென்றடைந்திருக்கமுடியும்? இவ்வுலகின் இருண்டப் பகுதிகளுக்கு எத்தனை மிஷனரிகளை, வேதாகமப் பணியாளர்களை, ஊழியக்கார்களை அனுப்பியிருக்கலாம்? இயேசு கிறிஸ்துவுக்குள் அபரிவிதமான ஒரு வாழ்க்கையை அடைவதற்கான வாய்ப்பைப் பெற உதவாமல், எத்தனை உயிரற்றப் பொருட்களின்மேல் நம்முடைய பணம்

செலவிடப்பட்டுள்ளது? கடனுக்காக நாம் செலுத்தும் விலையின் செல்வாக்கானது நம்முடைய ஜீவனைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கிறது என்பதை நாம் உணருகிறோமா? சுவிசேஷத்தை வெளியே கொண்டுசெல்வதற்கு எவ்வளவு பெரிய தடையாக இது இருக்கிறது என்பதை நாம் கருத்தில்கொள்கிறோமா?

## உங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றுங்கள்

குறிப்பிடத்தக்க விதத்தில் ஏற்கனவே உங்களுக்குக் கடன் இருந்தால் என்ன செய்வது? அது உங்களுக்கு அதிகமாகத் தோன்றுகிறதா? நீங்கள் முற்றிலும் தொலைந்துவிட்டதைப்போல் உணருகிறீர்களா? இல்லை. ஏற்கனவே செய்த செயல்களின் விளைவுகளைத்தான் இப்போதும் நீங்கள் சந்திப்பது.

ஒரு கிறிஸ்தவனுடைய நடக்கை மிகவும் முக்கியமாகும். ஒரு கிறிஸ்தவன் வாக்குறுதி அளித்தால், அவனோ அல்லது அவளோ அதில் முற்றுமுடிய நிலைத்து நிற்கவேண்டும். நீங்கள் எதையாகிலும் வாங்குகிறீர்கள் என்றால், அதற்கானத் தொகையை செலுத்தவேண்டும். “துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற்போகிறான்; நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான்” (சங். 37:21) என்று வேதம் கூறுகிறது. மேலும், “நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாமலிருப்பதே நலம்” (உன்ன. 5:5).

ஒரு கிறிஸ்தவன் வியாபாரத்தை ஞானமற்ற விதத்தில் நடத்தி, அதன்மூலம் அளவுக்கதிகமானக் கடனை சேர்த்திருந்தாலும், அந்த நபர் கடனைத் திரும்பச் செலுத்துவதற்குத் தன்னால் முடிந்த அனைத்தையும்

செய்யவேண்டுமே ஒழிய கடனுக்காகக் கொடுத்த வாக்குறுதியைப் புறக்கணிக்கக்கூடாது. அதனால் தொடர்ந்து பாதகம் ஏற்பட்டாலும், தான் கொடுத்த வாக்கிலிருந்து மாறக்கூடாது. உங்கள் கடனை நீங்கள் அடைக்கவில்லையென்றால், அதை வேறு யாராவது அடைக்கவேண்டுமென்று அர்த்தமாகும்; மற்றொருவர் அந்த பாரத்தை சுமக்கவேண்டும். இப்படிச் செய்தால், இது ஒருவகையில் திருட்டு என்றாகிவிடுமல்லவா?

ஒருவர் திரும்ப செலுத்தவே முடியாது என்ற கடனுக்கு என்ன செய்வது? உதாரணத்திற்கு சூதாட்டத்தில் 500,000 டாலர்கள் கடன்பட்டுத் திரும்ப செலுத்தமுடியாமற்போன சகோதரியைப் போல. அவள் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அனுதினமும் வேலை செய்தாலும், அவளால் அதைத் திரும்பச் செலுத்தமுடியாது. சிலர் தங்கள் கைகளை விரித்து, “இப்படியிருக்க, கடனை அடைப்பதால் பயனென்ன?” என்று சொல்லலாம். அதிகமானக் கடனுக்கடியில் நொறுக்கப்பட்டவர்களும் உண்டு; அவர்கள் கடன் அடிப்பதைக் கைவிடவேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால் நாம் கீழே விழும்போதுதான் நாம் தேவனிடம் செல்லவேண்டுமென்று அவர் வாஞ்சிக்கிறார். நாம் தீயப் பழக்கங்களுக்கு அடிமையாகுதல் மற்றும் இச்சை போன்ற நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பவேண்டியிருக்கிறது. சூதாடுவதிலிருந்து விலகி, அதிகக் கடனுக்குள்ளாவதிலிருந்து விடுபடவேண்டும். பின்னர், நம்முடைய வாழ்க்கையை மாற்ற தேவனுக்கு அனுமதியளிக்கவேண்டும், இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்காக அற்புதங்களையும் செய்யுமாறு கேட்கவேண்டும். “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா

அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோ. 1:9). நமக்கு உதவி வேண்டுமென்பதையும், நாம் இரட்சிக்கப்படவேண்டுமென்பதையும் நாம் உணரவேண்டும். தேவனும் நம்மை இரட்சிப்பதுடன் மட்டுமல்லாமல், நம்முடைய வாழ்க்கையை மாற்றுவதற்கும் அவர் வாக்களித்திருக்கிறார்.

இந்த சமன்பாட்டின் "X காரணி" தேவனாவார். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோ. 1:7) என்று வேதம் கூறுகிறது. கடன் பயத்தைக் கொண்டுவரும். ஆனால் இங்கே ஒரு அற்புதமானக் காரியம் உண்டு: பயத்தை அன்பு மேற்கொண்டு ஜெயிக்கும், ஏனெனில் "பூரண அன்பு பயத்தைப் புறம்பேத் தள்ளும்" (1 யோ. 4:18). "தேவன் அன்பாகவே இருக்கிறார் என்றும் வேதம் கூறுகிறது" (1 யோ. 4:8). அப்படியென்றால் தேவனே வெற்றிவீரர். உங்கள் பயத்தைத் தோற்கடிப்பதற்கும், கடனால் ஏற்பட்ட உங்கள் வருத்தத்தை, அல்லது வேறெந்த வருத்தமாக இருந்தாலும் சரி அவரே எல்லாவற்றிற்கும் பதிலாக இருக்கிறார். வீண் செலவு செய்யும் பழக்கமோ, சூதாடும் பழக்கமோ உங்களிடம் இருந்தால், அதை மேற்கொள்வதற்கு உதவி செய்யக்கூடியவர் தேவன் ஒருவரே. தேவனே "தெளிந்த புத்தியைத்" தருகிறார் என்று இவ்பொருள்வசனம் சொல்கிறது, அதாவது அது ஒழுக்கமுள்ள மற்றும் சுயக்கட்டுப்பாடு நிறைந்த மனமாகும். சுயக்கட்டுபாடில்லாமையால்தான் நாம் கடனுக்குள் விழுந்தோம் என்றால், நம்மைக் கடன் வாங்காதாவாறு மட்டுமல்ல, கடனிலிருந்தும் வெளியே எடுப்பதற்கும் அவரே பதிலாவார். மனந்திரும்புங்கள்,

மேலும் தேவன் உங்களை எப்படி ஆசீர்வதிக்கபோகிறார் என்று பாருங்கள்.

"தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" (மத். 19:26) என்பதை நினைவுகூருங்கள். தன் கணவனுடைய கடனைத் தீர்க்க அந்த விதவையால் முடியவில்லை, ஆனால் அவள் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக, அவள் தேவனுடைய வழிநடத்துதலுக்காக தீர்க்கதரிசியிடம் சென்றாள். அவளிடம் ஒரு குடம் எண்ணெய் இருக்கிறது என்று அறிந்த எலிசா அவளுடைய அண்டை அயலகத்தாரிடம் எத்தனைப் பாத்திரங்களை வாங்க முடியுமோ அத்தனையையும் கேட்டு வாங்கச் சொன்னார். பின்னர் அவளுடைய பாத்திரத்திலுள்ள எண்ணெயை மற்றப் பாத்திரங்களில் நிரம்பும் வரை ஊற்றச் சொன்னார். அவர் சொன்னபடியே அந்த விதவையும் செய்தாள், அவளுடைய ஒரு குடம் எண்ணெயானது மற்ற எல்லா வெறும் பாத்திரங்களையும் நிரப்பும்படி தேவன் அற்புதம் செய்தார். பின்னர் அவள் அந்த எண்ணையை தன் கணவனுடைய கடனை அடைப்பதற்காகக் கொண்டுச்சென்றாள்.

அந்த விதவை தன்னிடம் என்ன இருந்ததோ அதை வைத்து என்ன செய்ய முடியுமோ அதை செய்வதற்கு முயற்சி எடுத்தாள். அந்த ஒரு குடம் எண்ணெய் அதிகமில்லையென்றாலும், அது அவளுடைய கணவனின் கடனைக் கொடுக்கப் போதுமானதாக இல்லாமற்போனாலும், அவள் தீர்க்கதரிசியினுடைய ஆலோசனைகளைத் தட்டிக்கழிக்கவில்லை. அவள் இறுதிவரை உண்மையாக இருந்தாள்; கீழ்ப்படிந்தாள், அவளுடைய உண்மைத்துவத்திற்காக ஆசீர்வதிக்கப்பட்டாள். "உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை

உனக்குக் கொடுக்கிறவர்" (உபா. 8:18). அந்த விதவை சும்மாயிருந்து எதுவும் செய்யாமல் இருக்கும்போது தேவன் அந்த அற்புதத்தை செய்யவில்லை. நம்முடைய முயற்சியும் முக்கியமாகும்; நம்முடைய நடக்கையும் முக்கியமாகும் – ஆனால் நம்முடைய இரட்சிப்பை நாமே பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் அந்த வழியில் அல்ல. மாறாக, அந்த விதவையின் செயல்கள் அவள் தேவனை விசுவாசித்ததன் வெளிப்பாடாக இருந்தன. நாம் அவருடன் சேர்ந்து வேலைசெய்ய அவர் வாஞ்சிக்கிறார். அந்த விதவையின் விசுவாசம் பெலனடைந்த அதே நேரம் தேவனுடைய நாமமும் மகிமைப்பட்டது. அதன் விளைவாக, அவளுடைய குணமானது அவருடன் சேர்ந்து வாழ்வதற்கேற்ற வகையில் அதிகமாக அழகாகச் செதுக்கப்பட்டது.

## கடன் 102: எப்படி இதிலிருந்து வெளியே வருவது?

உங்களுக்கு ஏற்கனவே கடன் இருந்தால், விரக்தியாகவேண்டாம்! விசுவாசம், பொறுமை மற்றும் ஜெபத்தை உங்கள் வாழ்வில் வைத்திருங்கள். தேவனுடன் ஒரு உக்கிராணத்துவ வாழ்கையை வாழ உதவும் மற்ற உபயோகமானக் குறிப்புகளை இப்பொழுது பார்ப்போம். இந்தக் குறிப்புகள் "கடன் 101: எவ்வாறு தவிர்ப்பது?" என்ற குறிப்புகளுடன் இணைந்துச் செல்லும்.

1. **கடன் சேருவதை நிறுத்தவும். மனந்திரும்புவதே முதல் படியாகும்.** உங்களைக் கடனுக்குள் தள்ளிய காரியங்களிலிருந்து முதலில் விலகுங்கள். உலகப்பொருள் மீதான உங்கள் ஆசை தேவனுடனான

உங்கள் உறவை எவ்வாறு பாதிக்கிறது என்பதை உணருங்கள். சூதாட்டத்தில் கடன்பட்ட அந்தப் பெண்மணிக்கு அவளது சூழ்நிலையின் தீவிரம் தெரியும், ஆனால் கடனை இன்னும் அதிகமாகச் சேர்ப்பதை நிறுத்தவேண்டும் என்பதே அவளது பிரச்சனைக்கான ஒரு பகுதித் தீர்வு என்பதை அவள் உணரவில்லை. உண்மையை சொல்லப்போனால், அனைத்துக் கடன்களையும் ஒரே நேரத்தில் அடைத்துவிடவேண்டும் என்பதற்காக லாட்டரி டிக்கெட்டுகளை வாங்கி அதில் ஜெயிக்கவேண்டும் என்று நினைத்தாள். நாம் உருவாகினப் பிரச்சனைகளைக் கண் இமைக்கும் நேரத்தில் சரிசெய்துவிடலாம் என்று நினைப்பதே ஒரு சோதனையாகும், ஆனால் பெரும்பாலும் அதைச் செய்யமுடிவதில்லை, ஏனெனில் அது யதாத்தமல்ல. மேலும் அச்செயல் நம்மை இன்னும் அதிகமான விரக்திக்குத்தான் வழிநடத்தும். சாத்தியமற்றதாகத் தெரியும் சூழ்நிலைகளிலிருந்து நம்மை விடுவிக்க தேவன் அற்புதங்களைச் செய்து நமக்கு உதவுவாரா? ஆம். ஆனால் அவர் அவருடைய குணத்திற்கும் ஒழுக்கப்பிரமாணங்களுக்கும் விரோதமாகச் செயல்படமாட்டார்; நாமும் அப்படி அவர் செய்யவேண்டுமென்று அவரிடம் எதிர்பார்க்கவோ வற்புறுத்தவோ கூடாது. நாம் மேலும் மேலும் கடனுக்குள் மூழ்காமல் இருப்பதே நாம் செய்யவேண்டிய நம்முடைய பங்காகும். “கையடித்து உடன்பட்டு, கடனுக்காகப் பிணைப்படுகிறவர்களில் ஒருவனாகாதே. செலுத்த உனக்கு ஒன்றுமிலாதிருந்தால்,

நீ படுத்திருக்கும் படுக்கையையும் அவன் எடுத்துக்கொள்ளவேண்டியதாகுமே” (நீதி. 22:26, 27).

2. **தொடர்ந்து ஒவ்வொரு முறையும் கடன் அடைப்பதை அதிகரியுங்கள்.** ஒவ்வொரு மாதமும் ஒரு சில டாலர்களாக இருந்தாலும், அதைக் கடன் அடைப்பதற்காகச் சேர்த்து வையுங்கள். சூதாட்டப் பெண்மணி ஒரே நேரத்தில் 500,000 டாலர்களையும் கொடுக்கமுடியவில்லை என்றாலும், ஒவ்வொரு முறையும் சிறிதளவு கொடுப்பதற்கான முயற்சிகளையாவது செய்யலாம் – அது ஒரு மாதத்திற்கு 10 டாலர்களாக இருந்தாலும் சரி. அந்தக் கடனிலிருந்து எவ்வாறு தப்பிப்பது அல்லது குறைவான அளவு கொடுப்பது போன்றவைகளை சிந்திப்பதில் உங்கள் நேரத்தை செலவு செய்யவேண்டாம். உண்மையுள்ள உக்கிராணக்காரனைக் குறித்து வேதம் சொல்வதைக் கடைபிடியுங்கள், உங்கள் மனநிலை எவ்வாறு மாறுகிறது என்று பாருங்கள். சிறு சிறு செலவுகள் நாம் எதிர்ப்பார்ப்பதற்கும் அதிகமாகச் சேர்ந்துவிடும், எனவே சிறிய சேமிப்பை செய்யுங்கள். தொடர்ந்து உங்களால் எவ்வளவு கொடுத்துக் கடனை அடைக்க முடியும் என்பதற்கு பட்ஜெட் திட்டத்தை போடும் அந்தக் குறிப்பைப் பயன்படுத்துங்கள். இதற்கு முன்னுரிமை கொடுங்கள், ஆனால் அதற்கே அனைத்து முன்னுரிமையையும் கொடுக்கவேண்டாம். யதார்த்தமாகவும் இருக்கவும். உதாரணத்திற்கு, உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்

தேவையான உணவை வாங்காமல் அதைக் கடன் கொடுக்கவேண்டாம். "ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்" (ரோமர் 13:7).

3. **தேவையற்ற செலவுகளைத் தவிர்த்துவிடவும்**. ஒரு பொருளை உண்மையாகவே தேவைக்காக அல்லது வசதிக்காக வாங்குகிறோமா என்று உங்களையே கேளுங்கள். நாட்கள் செல்லச் செல்ல இந்த இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளும்போது, அது உங்கள் பணத்தை சேமிக்க உதவும். உங்கள் மளிகைப் பொருட்களை வாங்குவதில் மறுபரிசீலனை தேவை என்ற குறிப்புடன் இது ஒத்துபோகும். இன்னும் என்னென்ன காரியங்கள் இல்லாமல் உங்களால் வாழமுடியும் என்று பாருங்கள், இதனால் உங்கள் கடனை அதிகமாக நீங்கள் அடைக்கமுடியும்.

a. வெளியே சாப்பிடுவதற்குப் பதிலாக வீட்டிலேயே சமைப்பது எப்படி இருக்கும்? இது சில டாலர்களை சேமிப்பதுடன் உங்களுக்கு ஆரோக்கியமானதும் கூட. எளிமையான, வீட்டு சமையல் என்றால் சமையல் அறையில் குறைந்த வேலை என்று அர்த்தம்; பசுமையான காய்கறிகள், பழங்கள், மற்றும் தானியங்களை மொத்த விலையில் வாங்குவது உறையவைத்த இரவு உணவைக் காட்டிலும் மலிவானதாகும்.

b. உடைகள் மற்றுமொருத் தேவையாகும், ஆனால் தேவை என்பது நாம் அதிகமாக செலவழிப்பதற்கான சாக்காகாது. பெரும்பாலான வேலை ஸ்தலங்களில் அதற்கேற்ற உடைக்கட்டுப்பாடு உண்டு, ஆனால் வேலைக்கு அணியவேண்டியப் பொருத்தமான உடைகள் பல்பொருள் அங்காடிகளைக் காட்டிலும் தள்ளுபடித் தரும் கடைகளிலேயே சுலபமாக வாங்க முடியும். விலையுயர்ந்த பிராண்டுகளை அணிவதென்பது வெறும் ஆடம்பரமாகும்.

c. உடற்பயிற்சிக் கூடத்தில் உறுப்பினராவதற்குப் பணம் கட்டுகிறீர்களா? உடற்பயிற்சி அவசியம்தான், ஆனால் வெளியே இயற்கையில் இலவசமாக உடற்பயிற்சி செய்து உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்த முயற்சியுங்கள். உங்கள் வீட்டிற்குப் பக்கத்திலேயே நீங்கள் நடைப்பயிற்சி அல்லது ஜாகிங் செல்லலாம்; உங்கள் உள்ளூர் சமுதாய மையம் இலவச உடற்பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்களா என்று பாருங்கள். இவ்வாறு செய்வதால் நீங்கள் உங்கள் பணத்தை சேமிப்பதுடன் தூய்மையான வெளிக்காற்றில் சிறிது நேரம் செலவிடவும் செய்கிறீர்கள்.

d. நம்மில் அநேகருக்கு வேலைக்குச் செல்ல கார் தேவைப்படுகிறது. உங்கள் வேலை ஸ்தலமானது நடந்தோ அல்லது பைக்கில் செல்லவோ தூரமாக இருந்தால், கார் ஒரு தேவையெனக் கருதலாம். ஆனால் டீலரிடமிருந்து புதிய கார் வாங்கி, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு கார் கடனைக் கட்டுவதைக்

காட்டிலும், சில வருடங்களுக்கு முன் வந்த மாடல்களில் ஏற்கனவே உபயோகப்படுத்தப்பட்டக் காரை முன்பணம் கொடுத்து வாங்குவதற்கு நீங்கள் யோசிக்கலாம். ஏனெனில், புதிய காரை வெளியே எடுத்த மறுநிமிடமே அதனுடைய மதிப்பு 20 சதவிகிதம் குறைந்துவிடுகிறது. ஒரு பொருள் தேவை என்பதற்காக அதற்காகக் கடனுக்குள் மூழ்குவது தேவையற்ற ஒரு காரியமாகும்.

மேலும் இதை நினைவுகூருங்கள்: "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்" (1 தீமோ. 6:7, 8).

## தேவையான கடன்

சில நேரங்களில், வீடு வாங்குவதற்கோ, தொழிலைத் துவங்குவதற்கோ, அல்லது கல்லூரிப் படிப்பை முடிப்பதற்கோ ஒரு தற்காலிகமானக் கடனுக்குள் செல்லவேண்டிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்படலாம். ஆனால் இப்படிப்பட்டத் தீர்மானங்கள் கவனமாகத் திட்டமிடப்படவேண்டும் (அதாவது முடிந்தவரை குறைந்த அளவில் கடன் வாங்குவது) மற்றும் எவ்வளவுத் துரிதமாக அதைக் கொடுத்து அடைக்கமுடியும் என்ற இலக்குடன் செயல்படவேண்டும். ஆனால் (விடுமுறைக்கு வெளியூர்களுக்குச் செல்வது, விலையுயர்ந்த டிசைனர் உடைகளை வாங்குவது, புதிய மரச்சாமான்கள் வாங்குவது, பிறருக்காகப் பரிசுகள் வாங்குவது) எனத் தேவையற்றப் பொருட்களை வாங்குவதும், அதை

அடைப்பதற்கு எந்த ஒரு திட்டமும் இல்லாமலிருப்பதே பிரச்சனையாகும்.

## மிக முக்கியமானக் கடன்

கடனைக் குறித்த சாரம்சமே இங்குதான் உள்ளது.

நம்மொவ்வொருவருக்கும் ஒரு கடன் இருக்கிறது, ஆனால் அது பணமோ அல்லது பொருளோ அல்ல. அது மிகவும் பெரியதாகும், மிகவும் அச்சுறுத்தும் ஒரு காரியமாகும், எந்த ஒரு பொருளாதாரக் கடனைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாகும். அது பாவக் கடனாகும். பரமண்டல ஜெபத்தில், இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது, "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடம் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே" (லூக்கா 11:4). இந்தக் கடனுக்கான விலை மரணமாகும்: "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23).

இந்த வசனம் இத்துடன் முடியவில்லை என்பதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

நம்முடைய இரட்சகாராகிய இயேசு நமக்கானப் பாவக்கடனை, நம்மொவ்வொருவருக்காகவும் செலுத்திவிட்டார். அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், ஆனால் நம்மால் அவருக்கு அதைச் சரீரப்பிரகாரமாகவோ, மனரீதியாகவோ, அல்லது ஆவிக்குரிய ரீதியாகவோ திரும்பச் செலுத்தித் தீர்க்கமுடியாது. "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்" என்று சங். 116:12 கூறுகிறது. ஆனால் நற்செய்தி என்ன தெரியுமா? இயேசுவின் மரணத்தின் மூலம் நமது கடன் – நமது பாவம் –

மன்னிக்கப்பட்டிருக்கிறது. மேலும், "உங்கள் பாவங்களினாலேயும்... மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து" என்று கொலோசேயர் 2:13 கூறுகிறது. ரோமர் 6:23ன் அடுத்தப் பகுதி இவ்வாறு முடிகிறது, "தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்." வாழ்க்கை – தேவனுடனான நித்திய வாழ்க்கை – நமக்கு அருளப்பட்டிருக்கிறது. "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்" என்று நாம் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் (சங். 116:13).

நீங்கள் ஒரு போர்ஷே (Porsche) கார் வாங்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள். அதையே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள், அதையே தான் வாங்க விரும்புகிறீர்கள். அதனால் அதை வாங்கச் செல்கிறீர்கள். முன்பணம் ஏதுவும் செலுத்தாமல் புத்தம் புதிய காரை வாங்கிவிட்டீர்கள். அனைத்து சம்பிரதாயங்களும் முடிந்துவிட்டன, கையெழுத்தும் போட்டாயிற்று. ஒரு பெரிய நிம்மதிப் பெருமூச்சு. இறுதியாக, உங்களுக்கென்று சொந்த போர்ஷே கார் வந்தாயிற்று. வாகனத்தை நிறுத்துமிடத்திலிருந்து அதை வெளியே எடுக்கிறீர்கள், மினிவேன் ஒன்று மாற்றுப்பாதை எடுத்து மிக வேகமாக வந்து காரின் பின்புற இடதுபக்கத்தில் மோதுகிறது. உங்களுக்கும் அந்த மினிவேன் ஓட்டுனருக்கும் ஒன்றும் ஆகவில்ல, ஆனால் உங்களது புத்தம்புதிய வாகனம், உங்கள் கண்மணியைப் போன்ற அந்தக் கார், சிதைந்துபோனது. உங்களுடைய போர்ஷேவின் மதிப்பு என்ன ஆனது? ஒரு சில நொடிகளில் அது மிகவும்

கீழிறங்கிவிட்டது. இப்பொழுது அந்தக் கடனைக் குறித்த உங்கள் உணர்வு எப்படி இருக்கும்?

உங்கள் மீது தேவன் வைத்திருக்கும் மதிப்பை எண்ணிப்பாருங்கள். உங்களுக்காக உயிரையும் கொடுக்கக்கூடிய மதிப்பு, அது ஒருபோதும் குறைவதில்லை. இயேசு உங்களுக்காக தன் சொந்த ஜீவனைக் கொடுத்ததற்கும், எப்போது வேண்டுமானாலும் கொடுப்பதற்கும் நீங்கள் மதிப்பு வாய்ந்தவர்கள் என்று கருதுகிறார். உங்களை இந்த அளவிற்கு நேச்சிக்கக்கூடிய தேவனுடன் நித்திய வாழ்க்கை வாழ்வதற்கு போர்ஷேவோ அல்லது வேறெந்த ஒரு காரியத்தையோ ஒப்பிடமுடியுமா? "நாம் பாவங்களுக்காகச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1 பேதுரு 2:24).

## மன்னிப்பு என்னும் கடன்

ஏழு வருடங்களுக்கு ஒருமுறை கொடுக்கப்படாத கடன்களையெல்லாம் இஸ்ரவேலர்கள் மன்னிக்கவேண்டும்: "விடுதலையின் விபரமாவது: பிறனுக்குக் கடன்கொடுத்தவன் எவனும், கர்த்தர் நியமித்த விடுதலை கூறப்பட்டபடியால், அந்தக் கடனைப் பிறன் கையிலாகிலும் தன் சகோதரன் கையிலாகிலும் தண்டாமல் விட்டுவிடக்கடவன்" (உபா. 15:2). இதைக் கேட்டீர்களா? தேவன் தம்முடைய பிள்ளைகள் கடன் வாங்குகிறவர்களாக அல்ல கொடுப்பவர்களாக இருக்கவேண்டுமென்றே வடிவமைத்திருக்கிறார்: "எற்றக்காலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும்,

நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்" (உபா. 28:12).

தேவனுடையப் பின்னடியார்களாக இன்று இந்தக் காரியம் நமக்கு எந்த விதத்தில் தொடர்புடையதாக இருக்கிறது? தேவன் நமக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை பிறருக்குக் கொடுத்து ஆசீர்வதிக்கும்படியாக நாம் கொடுக்கும் இடத்தில் இருக்கவேண்டும்.

யுகங்கள் நெடுகிலும் மன்னிப்பு என்னும் கருத்தை தேவன் உட்புகுத்திக்கொண்டே இருக்கிறார். கிறிஸ்துவின் தியாகபலியின் மூலம், நிழல் அதன் நிஜத்தை சந்தித்தது. சடங்காக இருந்தது நிஜமாக மாறியது. தேவன் நமது பாவக் கடனை மன்னிக்கிறார் என்பதற்கான எப்படிப்பட்ட அருமையானப் பாடம் இது! மேலும் தேவனுடைய நீதியுள்ள குணத்தை இவ்வுலகிற்கு வெளிப்படுத்தும் எத்தனை அழகான எடுத்துக்காட்டு!

மத்தேயு 18ல், தேவனை அடையாளப்படுத்திய ஒரு இராஜாவைக் குறித்தும், பாவிகளை அடையாளப்படுத்தின இராஜாவின் வேலைக்காரரில் ஒருவனைக் குறித்தும் ஒரு உவமையை இயேசு கூறுகிறார். இந்த வேலைக்காரன் இராஜாவிற்கு ஒரு பெருந்தொகையை, அதாவது 10,000 தாலந்துகள் கடன்பட்டிருந்தான் – இது வேதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ள மிகவும் பெரிய கடன் தொகையாகும் (வசனம் 24). நம்முடைய பாவக் கடனின் பாரம் வெளிப்படையானதும், மிகவும் பரிதாபகரமானதுமாகும். அந்த வேலைகாரனால் தன்னுடைய கடனை திரும்பச் செலுத்த முடியவில்லை, எனவே அந்த இராஜா,

“மனதிரங்கி” (வசனம் 27), அவனுடைய எல்லா கடனையும் மன்னித்துவிட்டான்.

இந்த உவமை இரட்சிப்பின் திட்டத்திற்கான ஒரு உருவகமாகும். எப்படி அந்த இராஜா தன்னுடைய வேலைக்காரனுடைய 10,000 தாலந்து கடனை மன்னித்தாரோ, அதேப்போல் தேவனும் நம்முடைய கடனை மன்னித்துவிட்டார். குறிப்பிடத்தக்க வகையில், அந்த இராஜா ஏன் தன்னுடைய வேலைக்காரனை மன்னித்தார் என்பதற்கானக் காரணத்தை இங்கே கூறுகிறார்: அவர் அவனை நேசித்ததினிமித்தம், அவன்மேல் மனதிரங்கினார், அதனால் அவனுடைய 10,000 தாலந்து கடனையும் மன்னித்துவிட்டார். “மனதிரங்கினார்” என்ற இந்த வார்த்தையானது இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்தபோது மீண்டும் மீண்டும் ஜனங்களை சுகமாக்கிய, அவர்களுக்குப் பிரசங்கித்த மற்றும் போதித்ததற்கானக் காரணமாக இருக்கிறது. தேவன் நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை வேதத்தின்மூலம் மீண்டும் மீண்டும் நம்மிடம் கூறிக்கொண்டே இருக்கிறார்.

ஆனால் இந்த உவமை இத்துடன் முடியவில்லை. அந்த இராஜா மன்னித்தபிறகு அந்த வேலைக்காரனுடைய நடக்கையை அது விவரிக்கிறது. யாருடைய கடன் மன்னிக்கப்பட்டதோ, அந்த வேலைக்காரன், தன்னிடம் மிகவும் குறைந்த அளவில், 100 வெள்ளிப்பணம் அதாவது 10,000 தாலந்திற்கு ஒப்பிடும்போது மிகவும் அற்பமான அந்த பணத்திற்காக, அவன் கடனைத் திரும்பச் செலுத்தும்வரைக்கும் அந்த வேலைக்காரனைத் துன்புறுத்தினான், காவலில் போடுவித்தான். இராஜா இவனை நடத்தியபிரகாரம் இவன் அந்த வேலைக்காரனை நடத்தவில்லை, மனதிரங்கவில்லை. மாறாக அவன் சுயநலமாகவும்

இரக்கமில்லாமலும் நடந்துகொண்டான். அந்த முதல் வேலைக்காரன் நடந்துகொண்ட விதத்தை இராஜா கேள்விப்பட்டபோது, அவனுக்குக் காண்பித்த அந்தக் கருணையைத் தள்ளி, "அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்" (வசனம் 34).

இந்த உவமையில் உள்ள பாடத்தை இயேசு தெளிவுப்படுத்துகிறார்: "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" (வசனம் 35). நாம் பிறரிடம் தொடர்புகொள்ளும்போது தேவனுடைய தயவையும் இரக்கத்தையும் நம்மூலம் வெளிப்படுத்த அவர் வாஞ்சிக்கிறார். இது ஏதோ வெளிப்புறமான ஒரு பட்சாதாபமல்ல; இருதயத்திலிருந்து வரக்கூடிய தொழுகையை, அதாவது நாம் எதை சொல்லுகிறோமோ செய்கிறோமோ அதை உண்மையாய் உணர்ந்து செய்யவே தேவன் வாஞ்சிக்கிறார். "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" (சங். 51:17). முதல் வேலைக்காரன் எந்த ஒரு மன உளைச்சலையோ அல்லது பரிவிரக்கத்தையோ உண்மையாக உணரவில்லை, தனக்கொரு இரட்சகர் தேவை என்பதை உணர்ந்து, அதை அனுபவித்த பிறகும் அவனுடைய செயல்கள் தன் சக மனிதனுக்கு விரோதமாக, மிகவும் கொடூரமாக இருந்தன. நாம் எப்படிப்பட்டவர்கள், எப்படிப்பட்ட செயல்களைச் செய்திருக்கிறோம் என்று மனம் வருந்தியவர்களாக மனம் உடைந்தவர்களாக, எந்த நிலையில் இருக்கிறோமோ அதேவிதமாக அவரிடம் செல்லவேண்டுமென்று தேவன்

வாஞ்சிக்கிறார். இதன்மூலம் அவர் தன்னுடையதைப் போலவே நமக்கொரு புது இருதயத்தை கொடுக்கமுடியும்.

இயேசுவை தைலத்தால் அபிஷேகம்பண்ணிய மரியாளை நினைவுகூறவும். குஷ்டரோகத்திலிருந்து இயேசு சுகமாக்கிய பரிசேயனாகிய சிமியோனின் வீட்டிலே பந்தியிருக்கையில் விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலத்தை மரியாள் இயேசுவின் தலைமீதும் பாதத்திலும் ஊற்றத்துவங்கினாள். அப்பொழுது சுயநீதியினால் வெளிப்பட்ட வெறுப்பு மற்றும் அலட்சியமே அங்கிருந்த மற்றவர்களுடைய வெளிப்பாடாகும். யூதாசையோ அந்த அன்பின் செயலானது, அவனுக்குள் இருந்தப் பேராசையை கோபமாக முடுக்கிவிட்டது. அதனால் அவன் எல்லோர் முன்னிலையிலும் மரியாளைக் கடிந்துகொண்டான்: “இந்த தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான். அவன் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்” (யோ. 12:5, 6). மரியாளின் பணிவிடையும் அவனை சந்தேகங்கோள்ளவும் பாரபட்சமாக யோசிக்கவும் வைத்தது: “இந்த மனிதன்” அதாவது “இவர் தீர்க்கதரிசியாக இருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரி இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்” (லூக்கா 7:39). இவ்விரு நபர்களுமே மரியாளின் செயலுக்குப் பின் உள்ள காரணத்தை உணரவில்லை. ஆனால் இயேசுவோ அறிந்திருந்தார்.

பின்னர் இயேசு அந்த இரண்டு நபர்களுடைய கடினமான இருதயங்களைத் தொடவும், மரியாளின் கிரியையை ஏற்றுக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு உவமையை அவர்களுக்குச் சொல்லத் துவங்கினார்: "ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார்." (வசனம் 41, 42).

சீமோன் அதற்குச் சரியாக, "எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான்" (வசனம் 43).

பின்னர் இயேசு சிமியோனின் நடக்கையை மரியாளின் நடக்கையுடன் ஒப்பிட்டு அது எவ்வாறு எதிர்மறையாயிருக்கிறது என்பதை விரிவாகக் கூறினார். சிமியோன் இயேசுவின் பாதங்களைக் கழுவத் தண்ணீரும் கொடுக்கவில்லை, அவர் வீட்டிற்குள் வந்தபோது அவரை வரவேற்கும் வகையில் முத்தமிடவுமில்லை. ஆனால் மரியாளோ இயேசுவின் பாதங்களைத் தன்னுடைய கண்ணீரினால் கழுவினாள், மேலும் அவர் வீட்டிற்குள் பிரவேசித்தது முதல் அவருடைய பாதங்களை ஓயாமல் முத்தமிட்டுக்கொண்டே இருந்தாள். அவள் அவரை மரியாதையுடன் மட்டுமல்ல அன்புடனும் நடத்தினாள். மரியாளின் பாவங்கள் அநேகமாயிருந்ததால் அவள் மன்னிக்கப்பட்டபின் அதிகமாய் அன்பு பாராட்டினாள். ஆனால் யாருக்கு குறைவாக மன்னிக்கப்பட்டதோ, அவர் குறைவாகவே அன்பு காட்டினார்" (வசனம் 47) என்று கூறினார்.

சிமியோன் இயேசுவினால் சுகமாக்கப்பட்டிருந்தான், ஆனால் அவன் சரீரபிரகாரமாக சுகம் பெற்றது தேவன் அவனுடைய பாவங்களை மன்னித்ததற்கான அடையாளம் என்பதை அவன் புரிந்துகொள்ளவில்லை. மரியாளைப் போலவே சிமியோனும் ஒரு பாவிதான், அவன் எவ்விதத்திலும் அவளைக்காட்டிலும் சிறந்தவனல்ல. ஆனால் அவன் அவளைக்காட்டிலும் அதிகமாகக் கவலைப்படுவதாக நினைத்தான். அவன் குஷ்டரோகத்திலிருந்து குணமாவதற்கு முன் ஜனங்கள் அவனை அருவறுப்புடன் பார்த்தனர், இப்பொழுதோ அவன் அவர்களைப் போலவே நடந்துகொண்டான். அவனோ யூதாசோ இருவருமே தாங்கள் எப்படிப்பட்ட பாவிகள் என்பதையோ, எந்த அளவிற்கு தங்களுக்கொரு இரட்சகர் தேவை என்பதையோ உணரவில்லை. மனமாற்றத்தோடு அவர்கள் இயேசுவிடம் செல்லவில்லை; அவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய கடன் மிகவும் சிறியது அல்லது ஒன்றுமேயில்லை என்பதுபோல் நினைத்தனர். எனவே, அவர்கள் இயேசுவை சிறிதளவே நேசித்தனர். இந்த நேசம் இயேசுவிடமும் மற்றவர்களிடமும் காட்டிய அன்பற்ற செயல்களில் வெளிப்பட்டது. தேவனையும் பிறரையும் எந்த அளவிற்கு நேசிக்கிறீர்கள் என்பது தேவன் உங்கள் பாவத்தை எந்த அளவிற்கு மன்னித்திருக்கிறார் என்பதை நீங்கள் எந்த அளவிற்கு உணர்ந்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து வெளிப்படும்.

உங்கள் பாவக் கடனுக்காக தேவன் எவ்வளவு செலுத்தியுள்ளார் என்பதை நீங்கள் பாராட்டினீர்கள் என்றால், உங்களால் தொடர்ந்து பாவம் செய்ய முடியுமா? கடனைத் தொடர்ந்து சேர்த்துக்கொண்டே இருக்கமுடியுமா? இல்லை. பாவிகளாகிய நாம் மரியாளைப்போல் நடந்துகொள்ளவேண்டும்.

ஒருவேளை சிமியோனின் வீட்டில் மரியாள் இயேசுவிடம் நடந்துகொண்ட விதத்தை முதலில் பார்த்தவர்களுக்கு அது அதிகப்படியானதுபோல் தெரிந்திருக்கலாம். ஆனால் அதன் கருத்தை நாம் உணர்ந்தபின்பு, இயேசு அவளுக்காக, நம் ஒவ்வொருவருக்காக, என்ன செய்திருக்கிறார் என்பதை நாம் அறிந்தபிறகு - கடமைக்காகவோ அல்லது கடன்பட்டிருக்கிறோம் என்பதற்காகவோ அல்ல, நாம் அவருக்கு அதற்குமேல் அளவில்லாமல் கடன்பட்டிருக்கிறோம் என்பதற்காகவும், அவர் யார் என்பதை அறிந்திருப்பதாலும், முழுமையான ஓர் நன்றியுணர்வுடன் மரியாளைப் போலவே அவரை நேசிப்பதைத் தவிர வேறு எதையும் நம்மால் செய்ய முடியாது.

நமக்கிருக்கவேண்டிய ஒரே கடன் இயேசுவிற்கு செலுத்தவேண்டிய கடனாகும். நமது கடன்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மை நம்முடைய மனங்களில் இயேசுவை நேசிப்பதற்கும், அவரைப்போலவே அன்பாகவும் மன்னிக்கும் தன்மையுள்ள குணத்தைப் உடையவர்களாக நாம் மாறுவதற்கும் ஒரு வல்லமையுள்ள வாஞ்சையானது நம் மனங்களில் உருவாகவேண்டும். அப்பொழுது நம்மைப் போலவே பிறரையும் பார்க்கவும், தேவன் அவர்களை எப்படி நேசிக்கிறாரோ அதேபோல நாமும் அவர்களை நேசிக்கவும் செய்வோம். கிறிஸ்து நமக்குள் இல்லாமல் இவ்வாறு செய்வதென்பது சாத்தியமற்ற ஒன்றாகும். கல்லான இருதயங்களிலிருந்து சதையான இருதயங்களை அவரால் உருவாக்கமுடியும். (எசே. 36:26).

எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவையும் அவர் உங்களுக்காகச் செலுத்திய கடனைக் குறித்தும் சிந்தியுங்கள். அது அவருடன் சேர்ந்து வாழ்வதற்கான நித்திய வாழ்க்கை என்னும் தேவனுடைய பரிசாகும்.

இதை அவர் உங்களுக்குக் கொடுக்கிறார். ஒருவேளை உலக சரித்திரத்திலேயே நீங்கள் ஒரு பெரிய பணக்காரராக இருந்தாலும் கூட, அவர் செலுத்திய கடனை திரும்பச் செலுத்த அதிகமானப் பணமோ, கிரெடிட் கார்டுகளோ போதாது. மேலும் தேவனுக்கு உங்கள் பணம் தேவையில்லை. எந்த ஒரு கட்டணமும் அவருக்குத் தேவையேயில்லை. மன்னிப்பு, நித்திய வாழ்வு, மற்றும் புதிய இருதயம் என்ற அவருடைய பரிசை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா இல்லையா என்ற தீர்மானத்தை நீங்கள் எடுக்க அவர் உங்களை அழைக்கிறார்.

முடிவு உங்கள் கையில்!

AMAZING FACTS

India

# அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும் இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள் எதிர்காலத்தை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

**BibleStudy.AFTV.in**

என்ற இணையதளத்தில் இன்றே எங்களை சந்திக்கவும்.

# AMAZING FACTS India

தேவனுடைய செய்தியே எங்களுடைய ஊழியம்




## BOOKSTORE.AFTV.INற்கு வருகைத் தரவும்.

இங்கே நீங்கள் கிறிஸ்தவப் புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் புக்மார்க்குகள் என பல பயனுள்ள பொருட்களை வெவ்வேறு மொழிகளில் வாங்கலாம்.

உங்கள் வீட்டிற்கே டெலிவரி செய்யப்படும்!

இன்னும் அதிகமான **இலவச** டிஜிட்டல் பத்திரிக்கைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.




AFTV.in/Free-Book-Library

ஆங்கிலம், ஹிந்தி, தெலுகு என பல மொழிகளில் கிடைக்கிறது!

Post Box No. 51 • Banjara Hills
Hyderabad, TS 500034

www.AmazingFactsIndia.org